கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.102/2013** **PW: 2** **07.07.2025**

2025 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 07 ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய செல்வி என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.)ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வி | வயது | 50 |
| த/க. பெயர் | கிருஷ்ணன் | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | கோழியூர் |
| மாவட்டம் | கடலூர் | | |

**குறுக்கு விசாரணை**

எனது கணவர் பெயர் கிருஷ்ணன். கண்ணுசாமி படையாட்சியை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. கண்ணுசாமி படையாட்சிக்கு பாத்தியமான பத்தரை செண்ட் வீட்டில் நான் குடியுள்ளேனா என்றால் சரிதான். கோழியூர் மெயின் ரோட்டிலிருந்து கிழக்கிலிருந்து மேற்காக வரும்போது முதலில் பள்ளிக்கூடம் உள்ளது என்றாலும், அந்த பள்ளிக்கூடம் வடக்கிலும் தெற்கிலும் உள்ளது என்றால் சரிதான். பள்ளிக்கூடத்தின் வடக்கு புறத்தில் பச்சமுத்து அவர்களின் சொத்து என்றால் சரிதான். பள்ளிக்கூடத்திற்கு வடக்கிலும், பச்சமுத்து வீட்டிற்கு வடக்கிலும் விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். யாரிடம் விற்றார்கள் என்றால் ஆதிமூலகோனார். பச்சமுத்து வீட்டிற்கு மேற்கில் நான் குடியிருக்கிறேன். அந்த சொத்தானது எனது வீட்டுக்காரருக்கு சொந்தமானது. எங்கள் ஊரில் கிழக்குத்தெருவில் வசித்த தனபால் ஏட்டு என்பவரை எனக்கு தெரியும் அவர் தற்சமயம் இறந்து விட்டார். நான் குடியிருக்கு இடம் தனபால் மனைவிக்கு பூர்வீகமாக சொந்தமானது என்றால் சரியல்ல. தனபால் என்பவர் எனது மாமனார் ஆதிமூலத்திற்கு ஒரு செண்ட் கிரயம் எழுதிக்கொடுத்தார். நான் தற்போது குடியிருக்கும் இடம் தனபால் அவர்களது நிலம் அல்ல. மொத்தமாக பத்தரை செண்ட்டில் 5.5 செண்ட் ஆதிமூலகோனாருக்கும் மீதமுள்ள 5 செண்ட் பச்சமுத்து குடியிருந்து அனுபவித்து வந்த சொத்து என்றாலும் நான் தற்சமயம் ராமலிங்கம் ஏட்டு வீட்டில்தான் குடியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் குடியிருக்கும் இடத்திற்கு மேற்கே அழகப்படையாட்சி மகன் ராதா என்பவருக்கு சொந்தமானது ஆகும். ஆதிமூலம் மற்றும் சின்னத்தம்பி ஆகியோர்கள் அண்ணன் தம்பி என்றால் சரிதான். பெரியவரான ஆதிமூலத்திற்கு திருமணம் ஆகவில்லை என்றாலும் சின்னதம்பி அவர்களுக்கு மட்டும்தான் திருமணம் ஆனது என்றால் சரியல்ல. சின்னதம்பி அவர்களுக்கு பச்சமுத்து, காத்தாயி, ராணி மட்டும்தான் வாரிசுகள்

என்றால் சரிதான். சின்னதம்பி அவர்களின் மனைவி பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. நான் குடியிருக்கும் இடத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் கூட்டுப்பட்டாவாக தான் உள்ளது. நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது, நான் படிக்கவில்லை. நான் தாக்கல் செய்த வீட்டுவரி ரசீதுகளில் கதவு எண் வெவ்வேறு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வெவ்வேறு வீட்டினுள்ள ரசீதுகளை நான் தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டின் மின்இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் என் கணவர் பெயரில்தான் உள்ளது. நான் குடியிருக்கும் வீட்டின் மின்இணைப்பு எண்.654 க

குறுக்கு விசாரணை பகுதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(S/d. N.Shalini)**
Additional District Munsif,
Tittagudi.